

கல்பனா
கலா மந்திரின்

# தாய் மகளுக்குக் கட்டிய தாலி

கதை
அறிஞர் அண்ணா M.A., M.L.A.

தயாரிப்பு - டைரக்ஷன்
R.R. சந்திரன்

கல்பனா கலாமந்திரின்

# தாய் மகளுக்குக் கட்டிய தாலி

*நடிகர்கள் :*

| | | |
|---|---|---|
| M. G. ராமச்சந்திரன் | ... | கனகு |
| M. G. சக்ரபாணி | ... | சுந்தர முதலியார் |
| K. A. தங்கவேலு | ... | துரையப்பன் |
| கோபாலகிருஷ்ணன் | ... | ஜான் |
| O. A. K. தேவர் | ... | பாலு |
| D. பாலசுப்ரமணியம் | ... | லோகு முதலியார் |
| R. பாலசுப்ரமணியம் | ... | அருமை நாயகம் |
| காக்கா ராதாகிருஷ்ணன் | ... | ஏழுமலை |
| E. R. சஹாதேவன் | ... | திருவேங்கடம் |
| ஆள்வார் குப்புசாமி | ... | காக்காப்பிள்ளை |
| சிவானந்தம் | ... | டாக்டர் |
| கரிக்கோல்ராஜ் | ... | ஜோசியன் |
| நாகரத்தினம் | ... | பூசாரி |
| T. K. சம்பங்கி | ... | நாட்டாண்மைக்காரன் |
| ஷண்முகம் | ... | சமையல்காரன் |

*நடிகைகள் :*

| | | |
|---|---|---|
| P. கண்ணாம்பா | ... | தனபாக்யம் |
| N. ஜமுனா | ... | சுந்தரி |
| ராஜசுலோசனா | ... | காவேரி |
| சுசீலா | ... | காந்தா |
| மோஹனா | ... | மீனா |
| அரங்கநாயகி | ... | ஏழுமலையின் தாயார் |
| சந்திரகலா | ... | லேடிடாக்டர் |

*கதை :*

அறிஞர் அண்ணா M.A. M.L.A.

| | | |
|---|---|---|
| *வசனம்* | ... | இராம. அரங்கண்ணல் |
| *இசையமைப்பு* | ... | T. R. பாப்பா |

*பாடல்கள் :*

உடுமலை நாராயணகவி, கவிஞர் கண்ணதாசன்
K. D. சந்தானம், அ. மருதகாசி

*பின்னணி :*

T. M. சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், சந்திரன், ஜிக்கி, லீலா, ஜானகி, ராணி, சுசீலா, ராஜேஸ்வரி, நித்தியகலா.

## (கதைச் சுருக்கம்)

தன்னை எதிர்த்த திருவேங்கிடத்துக்குப் பாடம் புகட்ட முனைந்தார், சீமான் சுந்தரமுதலியார். பாய்ந்துவந்த அடியாட்களை எதிர்த்த திருவேங்கிடம் அடிப்பட்டு வீழ்ந்தான். 'இறந்துவிட்டான்!' என்றெண்ணிய ஆட்கள், அவனை, ஓடும் ஆற்றில் உருட்டிவிட்டனர். கழனிக்குப்போன கணவன் திரும்பாததைக் கண்ட தனபாக்கியம் தவித்தாள். உதவியற்ற அந்த உத்தமியை ஊரைவிட்டே ஓடும்படிச் செய்தார் சீமான். ஒரே மகள் சுந்தரியுடன், ஆப்பம்சுட்டு விற்று, நெஞ்சில் சுமைகளோடு, வாழ்க்கையை நடத்தினாள் தனபாக்கியம்.

"அவளைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம் நானிருக்கிறேன். எனக்கு சாதியைப்பற்றி அக்கரையில்லை," என்று சங்கநாதம் செய்தான், சீர்திருத்தவாதியான கனக சுந்தரம். ஊரின் எதிர்ப்பையும், தந்தையின் திகைப்பையும் கண்ட கனகு, யாருக்கும் தெரியாமல் சுந்தரியைப் பதிவுத்திருமணம் செய்துகொண்டான்.

கனகுவின் குடும்பத்துக்குத் திரண்ட செல்வம் வரக்கூடிய இரகசியம், சுந்தரமுதலியாரிடம் சிக்கியது. விடுவாரா அவர்? தன் மகள் காவேரியைக் கனகுக்குக் கட்டிவைத்துவிடத் திட்டம் போட்டார். தனக்குக் கொடுக்கவேண்டிய கடனை அம்பாக வைத்து, லோகநாயகத்தை மிரட்டினார். ஊர்ப்பகை! அதோடு, சீமானின் மிரட்டல்!!—இரண்டையும் கண்டு கலங்கிய லோகு, தனபாக்கியத்தை அழைத்து, தன் குடும்ப கவுரவத்தைக் காப்பாற்றும்படி வேண்ட, புலியானாள் தனபாக்கியம். தன் ஆசைகள் நொறுங்கிய நிலையில், அங்கிருந்து போகிறாள். அன்று இரவே, அவள் வீடு எரிகிறது. அவமானம் தாளாது, இருவரும், தற்கொலை செய்துகொண்டதாகக் கனகு கருதுகிறான்; லோகுவும் எண்ணுகிறார்.

வேதனையுடன் கிடக்கும் அவர்களை, மீண்டும் சந்திக்கிறார் சுந்தரமுதலியார். இம்முறை அவர் வீசும் 'அம்பு' கண்டு லோகு திண்டாடுகிறார். தனமும், சுந்தரியும் இறந்ததற்குக் காரணம் லோகுதான் என்று, ஒரு பொய்க்கடிதத்தை வைத்துக்கொண்டு மிரட்டுகிறார். வேறு வழிதெரியாத கனகு, தந்தையின் மானத்தைக் காப்பாற்றவும், அதேசமயம் சீமானின் பணத்திமிருக்குப் பதிலளிக்கவும், காவேரியைத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதிக்கிறான். திருமணமும் செய்துகொள்கிறான்......ஆனால்

கனகு காவேரியுடன் வாழ்ந்தானா?
சுந்தரியையும் தனத்தையும் பிறகு சந்தித்தானா?
ஆற்றில்போன திருவேங்கடம் என்ன ஆனார்?
சாதித்திமிருக்கு கனகு எப்படி புத்தி புகட்டினான்?
அத்தனையையும் வெண்திரையில் காண்க!

# தாய் மகளுக்குக் கட்டிய தாலி

## பாட்டு 1

பறந்து பறந்து எங்கும் திரியும் பறவை வாழ்வைப் பாரு—
பறவை வாழ்வைப் பாரு—இந்த
ஜெகத்தில் நீஅதைப் போலே சிறந்த வாழ்வைக் கண்ட
துண்டோ (பற)

சாதிச்சண்டை யில்லே— ஓயாச் சமயச் சண்டையில்லே
—வேத
சாஸ்திரங்கள் கூறும் விதி விலக்கும் இல்லே (பற)

குடி கெடுத்து விட்டு—பழிகள் கோடி செய்து விட்டு
கடவுளே வணங்கி நிதமும் கண்ணீர் விடுவதில்லே (பற)

உள்ளது உள்ளபடி பேசி உலகில் வாழ்ந்திடலாம்
கள்ளம் கபடுகள் இன்றி உலகில் காலம் போக்கிடலாம்
(பற)

## பாட்டு 2

கனகு: ஆடிவரும் ஆடகப் பொற்பாவையடி நீ
அன்றும் இன்றும் என்றுமே என் ஆவியடி நீ (ஆடி)

சுந்தரி: தேடிவரும் இன்பமெல்லாம் நிச்சயமே
சீர் மிகுந்த திராவிடத்தின் லட்சியமே (ஆடி)

கனகு: செந்தமிழ்க்கே சொந்தம் எது...?
சுந்தரி: சிந்துப் பாட்டு......
கனகு: எந்தனுக்கே சொந்தம் எது?
சுந்தரி: ............
கனகு: உம் சொல்லு...எந்தனுக்கே சொந்தம் இந்த இன்ப
ஊற்று (ஆடி)

(ஆடி)
சுந்தரி: என்றும் சதமா இதல்லாம் விளையாட்டு
தங்கு தழிழ் பண்பும் நிறை அன்பும் இருந்தும்
எங்களிடம் ஏது பணம் ஏழையன்றோ நான்

கனகு: பொங்கிவரும் அழகினிலே ஏழை இல்லே
நீ ஏழை இல்லே

பூத்தமலர் சிரிப்பினிலே ஏழை இல்லே
நீ ஏழை இல்லே

செங்கரும்பு பேச்சினிலே ஏழை இல்லே
நீ ஏழை இல்லே

இந்த சிந்தனையெல்லாம் உனக்கு தேவையே இல்லே
(ஆடி)

## பாட்டு 3

ஒன்றல்ல இரண்டல்ல தம்பி—சொல்ல
ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ் நாட்டில் (ஒன்றல்ல)

தென்றல் தரும் இனிய தேன் மணமும் கமழும்
செங்கனியும் பொன் கதிரும் தந்துதவும் நஞ்சை வளம்
(ஒன்றல்ல)

பகைவென்ற திறம்பாடும் பரணி வகை—செழும்
பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத் தொகை—வான்
புகழ் கொண்ட குறளோடு அகம் புறமும்—செம்
பொருள் கண்ட தமிழ்ச்சங்க இலக்கியப்பெரும் செல்வம்
(ஒன்றல்ல)

முல்லைக்குத் தேர் கொடுத்தான் வேள்பாரி—வான்
முகிலினும் புகழ் படைத்த உபகாரி
சொல்லுக்குத் தலை கொடுத்தான் அருள் மீறி—கவிச்
சொல்லுக்குத் தலை கொடுத்தான் அருள் மீறி—இந்த
வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு (ஒன்றல்ல)

## பாட்டு 4

கனகு : சின்னஞ் சிறு வயது முதல் சேர்ந்து நாம் பழகி வந்தோம்
இனியொரு பிரிவும் உண்டோ? இன்பம் பெறத்
தடையுமுண்டோ?

சுந்தரி : சின்னஞ் சிறு வயது முதல் சேர்ந்து நாம் பழகி வந்தோம்
இனியொரு பிரிவும் உண்டோ ? இன்பம் பெறத்
தடையுமுண்டோ?

கனகு : கன்னி உந்தன் மழலையிலே கற்பனைக்கும் வடிவு
கண்டேன்

சுந்தரி : கண்டதொரு வடிவமெல்லாம் காதலரின் உடமை
யன்றோ

இருவர் : சின்னஞ் சிறு வயது முதல்.........

சுந்தரி : காதலெனும் உலகினிலே பேசும் மொழி புதுமையன்றோ

கனகு : கன்னியரின் மழலை யெல்லாம் செந்தமிழின் இனிமை
யன்றோ

இருவர் : சின்னஞ் சிறு வயது முதல்.........

## பாட்டு 5

பெண்: தஞ்சாவூரு பொம்மையைப் பாரடி—அடியாத்தே
சாஞ்சி நிக்கற அழகை பாரடி
அஞ்சாறு கலர் சட்டை—அதில்
யானை குதிரை ஒட்டை—புதுப்
பஞ்சாங்கம் போல் வருச மாசம்
பதிஞ்சிருக்கிற ஜோரு...அதிசயம் பாரு (தஞ்சாவூரு)

துரை: அடி வாலு கொண்டைக்காரி—நீ
வம்புச் சண்டைக் காரி

பெண்: உன் வாயை அடக்கிப் பேசு தம்பி
ஊரு தான் பொல்லாது...உடம்பு தாங்காது

கனகு: வம்புக்கிழுக்கிறதும் வாய்ச் சண்டை போடுவதும்
பொம்பளைக்கே கூடப் பொறந்த குணம்

சுந்தரி: ஜம்பமாப் பேசறதும் சவடால் அடிக்கிறதும்
ஆம்பிளைக்கே பொதுவா அமைந்த குணம்
தெரியாதா சொல்லத் தெரியாதா—உங்கள்
சேதியை இன்னும் சொல்லவா
கேலிக்கு இடமல்லவா—சொன்னாலே
கேலிக்கு இடமல்லவா

கனகு: உள்ளத்தில் குறும்பாய் சிரித்திடுவார்—அந்த
உண்மையை உதட்டில் மறைத்திடுவார்
கள்ளத்தைக் கலையாய் வளர்த்திடுவார்—கடைக்
கண்ணாலே கலகம் விளைத்திடுவார் (தெரியாதா)

சுந்தரி: ஊருக்கு நீதி உரைத்திடுவார்—தன்
வீட்டுக்குள் பெண்ணை அடைத்திடுவார்
கோரிக்கை நிறைவேறக் குழைந்திடுவார்—தன்
காரியம் முடிந்த பின் மறந்திடுவார்

கனகு: அன்புடனே முழுமனதோடு பெண்ணை
நம்பினால் கொடுப்பாள் திருவோடு
நம்பிய சகுந்தலை பட்டபாடு—இந்த
நாடறிந்ததல்லவோ வெட்கக் கேடு. (தெரியாதா)

## பாட்டு 6

கொடுமையடா! கொடுமையிது!
குடிகெடுப்போர் செய்கையிது
கொஞ்சமும் அடுக்காது
குமுறுதடா நெஞ்சமது
வானம்பாடி ஒன்று வாழ்விழந்தே போகுதடா
மானம் காத்திடவே வழியும் ஏதடா? வேறு
வழியும் ஏதடா? (வானம்)

கானம் பாடிவந்த கண்ணுன ஜோடியின்று
கலங்கும் நிலையைப் பாரடா
வீணே வஞ்சகரால் வேதனைத் தீ சூழ்ந்ததடா
வழியும் ஏதடா?—வேறு
வழியும் ஏதடா? (வானம்)

புன்னமலர்ச் சோலையிலே தென்னல்வரும் வேளையிலே
ஒன்று பட்ட உள்ளமதைப் பிரித்ததேனடா...ஆ.........
பொல்லாமல் நேர்ந்ததனுல் சொல்லாமல் ஓடுதடா
வழியும் ஏதடா?—வேறு
வழியும் ஏதடா? (வானம்)

## பாட்டு 7

தோகை இங்கே—மேகம் அங்கே—சூறைக் காற்று மோதுதே
பாவை மனதில் சூழும் துயரம் பாடமாகிப் போனதே......
(தோகை)

கன்னி இளமை கணவன் இன்றி கருவும் உருவும் காணுமோ?
என்னை ஒருவர் மணந்த உண்மை இந்த உலகம் ஏற்குமோ?
மாந்தர் சேர்ந்து மலர்கள் தூவி மாலை சூடும் உலகிலே
அன்னை கையால் தாலி சூடும் அவதி கொண்டேன்
வாழ்விலே......(தோகை)

ஒருவர் கண்ணை ஒருவர் கொண்டு உலகைக்காணலாகுமோ?
பொருளினுலே உறவு கொண்டால் அமைதி வாழ்வில்
தோன்றுமா? (தோகை)

## பாட்டு 8

துரை : வந்தேன் வந்தனமே—மாமா
மனுஷனை துரையப்பன் (வந்தேன்)
சுந்தர மென்கின்ற முதலியாருக்கு
தோன்றிய பெண்மணி காவேரி மானுக்கு
சொந்தமுடன் மாலை சூட்டிய கனகுக்குத்
தோழன் தயாளன் குணாளனை துரையப்பன் (வந்தேன்)

சுந்தரம் : டேய்......துரையப்பா............

துரை : மாமா—நான் போட்டுகிட்டிருக்கேன் ஆமாம்—
என்னே — மதிப்பில்லாமே நீ பேசிடலாமா (மாமா)
சீமை சரக்கிலே பூமி உருளுது
தெரியாத பாஷை யெல்லாம் தெரியுது
சாமிக்குப் பொதுவா சொல்றேன் — உங்க
சங்கதியை நெனேச்சா எங்கெங்கோ எரியுது (மாமா)

சுந்தரம் : டேய்...இனிமே நான் மனிசனு யிருக்க மாட்டேன்

துரை : மாமாடி நீ மனிசனில்லே — நீ
மனிசனில்லே
மறந்து வந்து பொறந்தவரு — இங்கே
மறந்து வந்து பொறந்தவரு
ஏமாந்த குடியைக் கெடுப்பே — நீ

ஏழையை வயித்திலே அடிப்பே
சாமியாரைப் போலே நடிப்பே — நல்ல
சமயத்திலே கழுத்தை அறுப்பே — உனக்கு
பாமாலே பூமாலே போட்டாலும் போருது — நீ
பண்ணுத பாவமில்லே கொன்னுலும் தீராது (மாமா)

## பாட்டு 9

உள்ளதைச் சொன்னு பைத்தியமின்னு உலகம் சொல்லுது
அது — நல்லது கெட்டது புரிஞ்சுக்காமெ நடந்து கொள்ளுது
எள்ளளவும் நேர்மையில்லே இதயத்திலே அன்பில்லே
ஏச்சிப் பிழைக்கும் மார்க்கத்திலே எதுவும் குறையலே
ஏசு முதல் காந்திவரை எத்தனே பேர் சொன்னுலும்
ஏனிண்ணு கேக்கலே இருந்த நிலேமை திருந்தலேண்ணு (உ)

மூச்சுவிடும் உரிமையைப்போல் மொழியும் மனிதன் உரிமை
—ஊர்
முழுதும் அறிந்த உண்மை இதை மறுப்பதுதான் கொடுமை
வாய்த்த பிள்ளே இருக்கையிலே வளர்ப்புப் பிள்ளே எதற்கு—அது
மடமை — மதியின்மை — அதனுல் வளரும் தீமை இண்ணு (உ)

மக்கள் தொண்டே மனிதன் செய்யும் மாபெரும் தொண்டு — நீ
வணங்கும் அந்தக் கடவுளுக்கும் மகிழ்ச்சியுமுண்டு
கற்பனேயுமில்லே இது கட்சிக் கொள்கையுமில்லே
கடவுள் தன்மை அறிந்தவர்கள் காட்டியவழி என்று (உ)

பக்தி இருக்கணும் மனசிலே — உன்
புத்தி இருக்கணும் தொழிலிலே
எத்துகள் பேசி கடவுளேயே
ஏமாற்றுவது சரியில்லேண்ணு (உ)

## பாட்டு 10

அன்பின் விளைவே அமுதே நீ கண்ணுறங்கு
இன்பக் களஞ்சியமே என் உயிரே கண்ணுறங்கு
சோதனைக்காலமடா மகனே சோர்ந்துவிடாதே
நீதி வழி காட்டும் நித்திலமே கண்ணுறங்கு
அப்பா வருவார் ஆசையோடுன்னை அள்ளி அணைத்
[திடுவார்
தப்பாமல் நூறு முத்தம் கன்னத்தில் தந்திடுவார்
கண்ணுறங்கு (அ)

★ ★ ★

**கனவு ஆரம்பம் :**

சிந்திச்சி பாக்காமே செய்த பிழைக்காக
குந்திகிட்டு அழுதா குறை தீருமா—நீ
நேர்வழியே நடந்திருந்தா இவளைப்போல—நீயும்
ஊர் அறிய வாழ்ந்திருப்பே மனசு போல—நீயும்

சு. பொ : ஆமாம்

பாரு என்னை சந்தோஷமா இருக்கிறேன் — நீ
பதிவு மணம் பண்ணிகிட்டும் தவிக்கிறே

க. பொ : சட்டம் அனுமதிச்சா போதுமா — எதையும்
சமூகம் ஒப்புக் கொள்ள வேணுமா

சு. பொ : நீ — ரகசியமா கண்ணாலத்தைப் பண்ணிகிட்டே
ஊரில் சகஜமாக வாழலாண்ணு எண்ணிகிட்டே

க. பொ : முடியுமா ?

து. பொ: அண்ணே...............

க. பொ : என்ன...?

து. பொ: சாட்சி போட்ட நானிருக்க
சம்மதிச்ச ஆள் இருக்க
ஏச்சும் பேச்சும் பேசற மனுஷ யாரண்ணே —
அண்ணியை
ஏச்சும் பேச்சும் பேசற மனுஷ யாரண்ணே

க. பொ : அட சரிதாம்பா...............
உனக்கும் அவனுக்கும் தெரியும் துரையப்பா
ஊரு — உலகத்துக்குத் தெரியாதது குறையப்பா

து. பொ: ஓஹோ...............

க. பொ : அதுக்குத்தான்
சொந்தக்காரன் நாலுபேரு சுத்தியுள்ளவன் நாலுபேரு
வந்திருந்து பாக்க வேணும் — ஊர் அறிய தம்பதி
[களாக வேணும்

து. பொ: காதல் செய்ய வேணுமா
கலப்பு மணம் வேணுமா — சொல்லண்ணே

க. போ: வேணும் — ஆனு
காதலாலே ஆணும் பெண்ணும்
கலந்து பழகினுலும் உள்ளக்
கட்டுப்பாடு இருக்க வேணும் — இல்லேன்ன
கட்டுப்பாடு இருக்க வேணும் — இல்லேன்ன
கெட்ட பேரு எடுக்க வேணும் — இவளேப்போல
கெட்ட பேரு எடுக்க வேணும். (நேர்வழியே)

★ ★ ★

கனகு: செங்கரும்பு சாற்றினிலே தேன் கலந்து — இனிய
தெள்ளமுதின் சுவையோடு கனிபிழிந்து
திங்களேயும் தங்கமோடு கலவைதந்து — வரைந்த
சித்திரமே கற்பனேயின் அற்புதமே — என்
விழியோடு விளேயாடும் கனவல்லவா — நெஞ்சம்
மறவாமல் உறவாடும் நினேவல்லவோ

சுந்தரி: தென்னகத்து மூவேந்தர் தோள் வலிமையும்-சேரன்
செங்குட்டுவன் தம்பியைப்போல் புலமையும்—மனம்
எண்ணும் போதே இனிக்கும் எழில் வளமையும்—
நிறைந்த
என்னுயிரே! மன்னவரே! இன்னமுதே!—எந்தன்
விழியோடு விளேயாடும் கனவல்லவா—நெஞ்சம்
மறவாமல் உறவாடும் நினேவல்லவா

★ ★ ★

பெண்: சிந்து பாடும் தென்றல் வீசும் இன்பமான இரவே
ஆண்: எந்த நாளும் மங்கிடாத அந்தமான நிலவே
பெண்: அன்பு மேவும் கண்கள் பேசும் விந்தை ஏதோ அறி
[யேன்
ஆண்: பொங்கும் காதல் சங்கநாதம் கொஞ்சுதே சேல்
[விழியே

★ ★ ★

கனகு: ஜாதி மதம் இல்லாத இடம்
காசு பணம் காணுத இடம் (ஜாதி)

துரை: ஆதி மனிதன் வாழ்ந்த இடம்
அதுவே காதல் வாழும் இடம் (ஜாதி)

கனகு: தாழ்வும் உயர்வும் கிடையாது
தனியார் உடமை கிடையாது

துரை: வாழும் உரிமை எல்லார்க்கும்
மறுக்கும் வழக்கம் கிடையாது (ஜாதி)

சிவாஜி பிரிண்டர்ஸ், சென்னே-14; போன்: 83423.